விநாயகர் அகவல் கவசம்

# காரிய சித்தி மாலை

# விநாயகர் அகவல்
# கவசம் காரிய சித்திமாலை

PDPM
A V R
Books

பதிப்பாசிரியர் : விஜய்

வெளியீடு
ஜெயம் பதிப்பகம்,
67, காமகோடி தெரு, ஏரிக்கரை சாலை
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
விலை ரூ. 3/-

பதிப்புரிமை பெற்றது
முதல் பதிப்பு
I-10M 3C-9-8'

வெளியிடுபவர்:
**ஜெயம் பதிப்பகம்**
A-1, சாந்தி அவென்யூ,
11, ஏரிக்கரைத் தெரு,
சென்னை-600 033.

# காசிப முனிவர் அருளிய
# காரிய ஸித்தி மாலை

பந்தம் அகறறுய அநந்தகுணப்
பரப்பும் எவன் பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து சுரக்குமோ
சந்த மறை ஆகமங் கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்தஇறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம். 1

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பெருளெவனிவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலக முதலைக் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம். 2

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவுமருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம். 3

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் சுங்கை முதலான
தீர்த்த மாகி அறிந்தறியாத்
திறத்தி னாலும் உயிர்க்குநலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோரம். 4

செய்யும்வினையின் முதல்யாவன்
சேய்யப் படும் அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன் யாவன்

உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம். 5

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன் எண்குணன் எவன் அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம். 6

மண்ணில் ஓர்ஐங் குணமாமி
வதிவான் எவன் நீர், இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன் தீயின்
மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்!
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம். 7

பாச அறிவில் பசு அறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம். 8

## நூற்பயன்

இந்த நமது தோத்திரத்தை
யாவன் மூன்று தினமும் உம்மைச்
சந்தி களில்தோத் திரஞ் செயினும்
சகல கரும சித்திபெறும்
சிந்தைமகிழ்ச் சுகம்பெறும் என்
தினம்உச் சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர்எண்கால்
படிக்கில் அட்ட சித்தியுறும் 9

திங்கள் இரண்டும் தினந்தோறும்
திகழஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம்
தயங்க இருபத் தொருமுறைமை
பொங்கும் உழுவ லால்கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவும்
தோன்றும் எனச்செப்பினர் மறைந்தார். 10

முற்றும்

# நக்கீரதேவர் அருளிய
# விநாயகர் அகவல்

## கணபதி வணக்கம்
## ஆசிரியவிருத்தம்

சீர்கொண்ட கரிமுகமு மைந்து கையும்
சிறந்தவா பரணமுடன் ஒற்றைக் கொம்பும்
ஏர்கொண்ட விமலர்கடங் கலியைத் தீர்த்து
எழில்குகற்கு முன்பிறந்து அமரர் மெச்சப்
போர்கொண்ட பிணரவமாய்ப்பிரண வத்துள்
பெருமைசிவ லிங்கமென வந்த மூலம்
கார்கொண்ட பிண்ட மெங்குந் தானாய்
கத்திடுங் கணபதியை வணங்குவோமே

## அகவல்

சீர்தரு மூலச் செழுஞ்சுடர் விளக்கே
கார்நிற மேனிக் கற்பகக் களிறே
அல்லல் வினையை யறுத்திடு ஞான
வல்லபை தன்னை மருவிய மார்பா
பொங்கர வணிந்த புண்ணிய மூர்த்தி
சங்கர னருளிய சற்குரு விநாயக
ஏழை யடியே னிருவிழி காண

வேழ முகமும் வெண்பிறைக் கோடும்
பெருகிய செவியும் பேழை வயிறும்
திருவளர் நுதலில் திருநீற்றழகும்
சிறுத்த கண்ணுஞ் சீதளப் பார்வையும்
நறுத்திகழ் நாசியும் நாண்மலாப் பாதமும்
நவமணி மகுடநன்மலர் முடியும்
கவச குண்டல காந்தியும் விளங்கச்
சிந்தூரத் திலகச் சந்தணப் பொட்டும்
ஐந்து கரத்தி னழகும்வீற்றிருக்க
பாச வினையைப் பறித்திடு மங்குச
பாசத் தொளியும் பன்மணி மார்பும்
பொன்னாபரணமும் பொருந்துமுந் நூலும்
மின்னா மெனவே விளங்கு பட்டழகும்
உந்திச் சுழியும் உரோமத் தழகும்
தொந்தி வயிறுந் துதிக்கையுந்தோன்ற
வேதனு மாலும் விமலனு மறியாப்
பாதச் சதங்கைப் பலதொனி யார்ப்பத்
தண்டைச் சிலம்புந் தங்கக் கொலுசும்
எண்டிசை மண்டல மெங்கு முழங்கத்
தொகுது துந்துமி தொந்தோ மெனவே
தகு திந்திமி தாள முழங்க
ஆடிய பாத மண்டர்கள் போற்ற

நாடிமெய் யடியார் நாளுந் துதிக்கக்
கருணை புரிந்து காட்சி தந்தருள்
இருளைக் கடிந்து எங்கும் நிறையப்
பொங்குபே ரொளியாப் பொன்மலை போலத்
திங்கள் முடியான் நிருவுள மகிழ
வந்த வாரண வடிவையுங் காட்டிச்
சிந்தை தளர்ந்த சீரடி யார்க்கு
இகபர சாதன மிரண்ட முதலி
அகவினைத் துன்ப மகந்தை யறுத்து
மூலா தார முச்சுடர் காட்டி
வாலாம் பிகைதன் வடிவையுங காட்டி
மாணிக்க மேனி மலர்ப்பதங் காட்டிப்
பேணிப் பணியப் பீஜாட் சரமும்
ஓமென் றுதித்த ஓங்காரத் துள்ளே
ஆமென் றெழுந்த அட்சர வடிவும்
இடைபிங் கலைக ளிரண்டி னடுவே
கடைமுனை சுழிமுனைக் கபாலங்குறித்து
மண்டல மூன்றும் வாய்வோர் பத்தும்
குண்டலி யசைவிலி கூறிய நாடியும்
பூதமும் பொறியும் புகழ்குண மூன்றும்
வாதனை செய்யு மறிவையுங் காட்டி
ஆரா தார அங்குச நிலையைப்

பேறாகி நின்ற பெருமையுங் காட்டிப்
பஞ்ச மூர்த்திகள் பாகத் தமர்ந்த
பஞ்ச சக்திகளின் பாதமும் காட்டி
நவ்விட மெளவும் நடுவணை வீட்டில்
அவ்வு மாக்கினை அனாதி சதாசிவம்
நைவிழிஞான மனோன்மணி பாதமும்
நைவினை நணுகா நாத கீதமும்
கண்டு வணங்கக் கண்ணைத்திறந்து
விண்டல மான வெளியையும் காட்டி
ஐம்பத் தோரெழுத் தட்சர நிலையை
இன்பச் சக்கர விதிதனைக் காட்டிப்
புருவ நடுவணை பொற்கம லாசான்
திருவிளை யாடலுந் திருவடி காட்டி
நாதமும் விந்தும் நடுநிலை காட்டிப்
போத நிறைந்த பூரணங் காட்டி
உச்சி வெளிதனி லுள்ளொளி காட்டி
வச்சிரம் பச்சை மரகத முத்துப்
பவள நிறைந்த பளிங்கொளி காட்டிச்
சிவகயிலாசச் சேர்வையுங் காட்டிச்
சத்தம் பிறந்த தலத்தையுயும் காட்டித்
தத்துவந் தொண்ணூற் றாறையும்நீக்கிக்
கருவி கரணம் களங்க மறுத்து

மருவிய பிறவி மாயையை நீக்கி
உம்பர்க ளிருடிகள் ஒருவரும் காணா
அம்பர வெளியி னருளையுங் காட்டிச்
சக்தி பராபரை சதானந்தி நிராமய
நித்தியய ரூபி நிலைமையுங் காட்டி
அடியார் ஞான மமிர்தமா யுண்ணும்
வடிவை யறியும் வழிதனைக் காட்டி
நாசி னுனியில் நடக்குங் கலைகள்
வாசிவா வென்று வாங்கிப் பிடித்து
நின்மல வடிவாய் நிறுவித் தப்புறம்
வின் மயமான விதத்தையுங் காட்டித்
தராதல முழுதுந் தானாய் நிறைந்த
பராபர வெளியைப் பணிந்திடக் காட்டி
என்னுட லாவி யிடம்பொரு ளியாவுந்
தன்னுடைய வசமாந் தவநிலை காட்டி
நானெனு மாணவம் நாசம தாகத்
தானென வந்து தயக்கத் தீர
ஆன குருவா யாட்கொண் டருளி
மோன ஞான முழுது மளித்துச்
சிற்பரி பூரண சிவத்தைக் காண
நற்சிவ நிஷ்கள நாட்டமுந் தந்து
குருவுஞ் சீஷனுங்கூடிக் கலந்து

இருவரு மொருதனி யிடந்தனிற் சேர்ந்து
தானந்த மாகித் தற்பர வெளியில்
ஆனந்த போத அறிவைக் கலந்து
புவனத் தொழிலைப் பொய்யென் றுணர்ந்து
மவுனமுத்திரையை மனத்தினி லிருத்திப்
பெண்டு பிள்ளை பண்டு பதார்த்தங்
கண்டது மாயைக் கனவென காட்டிப்
பாச பந்தப்பவக்கடல் நீக்கி
ஈச னிணையடி யிருத்தி மனத்தே
நீயே நானாய் நானே நீயாய்க்
காயா புரியைக் கனவென வுணர்ந்து
எல்லா முன்செய லென்றே யுணர
நல்லா யுன்னருள் நாட்டந் தருவாய்
காரண குருவே கற்பகக் களிறே
வாரண முகத்து வள்ளலே போற்றி
நித்திய பூசை நைவேத் தியமும்
பத்தியாய்க் கொடுத்துப் பரமனே போற்றி
ஏத்திய னுதின மெளியேன் பணியக்
கூற்றினை, யுதைத்த குளிர்பதந் தந்து
ஆக மதுர வமிர்த மளித்துப்
பேசு ஞானப் பேறெனக் கருளி
மனத்தில் நினைத்த மதுர வாசகம்

நினைவிலும் கனவிலும் நேசம் பொருந்தி
அருண கிரியா ரவ்வை போலக்
கருத்து மிகுந்து கவிமழை பொழிய
வாக்குக் கெட்டா வாழ்வையளித்து
நோக்கரு ஞான நோக்கு மளித்து
இல்லற வாழ்க்கை யிடையூ றகற்றிப்
புல்லரிடத்திற் புகுந்துழ லாமல்
ஏற்ப திகழ்ச்சி யென்ப தகற்றிக்
காப்ப துனக்குக் கடன்கண் டாயே
நல்வினை தீவினைநாடி வருகினுஞ்
செல்வினை யெல்லாஞ் செயலுன தாமால்
தந்தையும் நீயே தாயும் நீயே
எந்தையும் நீயே ஈசனும் நீயே
போதஞானப் பொருளும் நீயே
நாதமும் நீயே நான்மறை நீயே
அரியும் நீயே அயனும் நீயே
திரிபுர தகனஞ் செய்தவன் நீயே
சக்தியும் நீயே சதாசிவம் நீயே
புத்தியும் நீயே பராந்தகன் நீயே
பத்தியும் நீயே பந்தமும் நீயே
முத்தியும் நீயே மோட்சமும் நீயே
ஏகமும் நீயே என்னுயிர் நீயே

PDPM A.V.R Books

தேகமும் நீயே தேவனும் நீயே
உன்னரு ளன்றி உயிர்த்துணை காணேன்
பின்னொரு தெய்வம் பேசவு மறியேன்
வேதனை கொடுத்த மெய்யிது தன்னில்
வாத பித்தம் வருத்திடு சிலேத்துமம்
மூன்று நாடியும் முக்குண மாகித்
தோன்றும் வினையின் துன்ப மறுத்து
நாலா யிரத்து நானூற்று நாற்பத்தெட்டு
மேலாம் வினையை மெலியக் களைந்து
அஞ்சா நிலைமை யருளிய நித்தன்
பஞ்சாட் சரநிலை பாலித் தெனக்கு
செல்வமும் கல்வியுஞ் சீரும் பெருக
நல்வர மேதரும் நான்மறைவிநாயக
சத்திய வாக்குச் சத்தா யுதவிப்
புத்திரனே தரும் புண்ணிய முதலே
வெண்ணீ ரணியும் விமலன் புதல்வா
பெண்ணா முமையாள் பெறுகுஞ் சரணை
அரிதிரு மருகா அறுமுகன் றுணைவா
கரிமுகவாரணக் கணபதி சரணம்
குருவே சரணம் குணமே சரம்
பெருவயி றோனே பொற்றாள் சரணம்
கண்ணே மணியே கதியே சரணம்

விண்ணேயொளியே வேந்தே சரணம்
மானத வாவி மலர்த்தடத் தருகிற்
றான த்தில் வாழும் தற்பரா சரணம்
உச்சிப் புருவத்துதித்துல களிக்குஞ்
சச்சி தானந்த சற்குரு சரணம்
விக்கின விநாயகா தேவே ஓம்
அரகரசண்முக பவனே ஓம்
சிவசிவ மஹாதேவ சம்போ ஓம்

## வஞ்சி வ்ருத்தம்

கணபதி யென்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி யென்றிடக் காலனுங் கைதொழும்
கணபதி யென்றிடக் கரும மாதலால்
கணபதி யென்றிடக் கவலை தீருமே.

## வெண்பா

ஓரானைக் கன்றையுமையாள் திருமகனைப்
பேரானைக் கற்பகத்தைப் பேணினால் - வாராத
புத்தி வரும் வித்தைவரும் புத்திரசம் பத்து வரும்
சத்திதருஞ் சித்தி தருந்தான்.

நகக்கீர தேவர் அருளிய
விநாயகர் அகவல் முற்றிற்று

# ஔவையார் அருளிய
# விநாயகர் அகவல்

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்-கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும்தா.
சீதக் களபச் செந்தாமரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னுனரை ஞானும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அங்சுகரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டும் செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன

இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்தே
திருந்திய முதல் ஐந்தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரும்இதுபொருள் என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆரு தாரத்து அங்குச நிலையும்
பேரு நிறுதீதிப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்

கடையிற் கழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு ப்பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்ன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூட்சமும்
எண்முகமாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்குருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள் வெளியிரண்டிற் கொன்றிட மென்ன

அருள்தரும் ஆனந்தத் தெழுத்தி என் செவியில்
எல்லை இல்லா ஆனந் தமளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பலாய்க்
கணுமுற்றி நின்ற கருப்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டடர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே

விநாயகர் அகவல் முற்றும்

# காசிப முனிவர் அருளிய
# விநாயகர் கவசம்

(இதை ஓதுபவர்கள் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்றுப் பல்லாண்டு வாழ்வர்)

தலைமுடி, நெற்றி, புருவம், இணைவிழிகள்

வளர்சிகையைப் பராபரமாய் வயங்கு
ஸ்விநாயகர் காக்க வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேக
மகோற்கடர்தாம் அமர்ந்து காக்க
விளரறநெற் றியை என்றும்விளங்கிய
காசிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வில் மகோ தரர்காக்க
தடவிழிகள் பாலசந் திரனார் காக்க. 1

உதடு, நாக்கு, முகவாய்க்கட்டை, வாக்கு, பல், காது, மூக்கு

கவின்வளரும் அதரம் கசமுகர் காக்க
காலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகம் கிரிசைகார் காக்க

நனிவாக்கைவிநா யபுதாம் காக்க
அவிர்நகை மின் முகர் காக்க
அள் எழிற் செஞ் செவிபாச பாணி காக்க
தவிர்தலுரு திளங் கொடிபோல் வளர்மணி
நாசியைச் சிந்தி தார்த்தர் காக்க. 2

முகம், கழுத்து, இணையான தோள்கள்,
முலை, உள்ளம், வயிறு.

காமருபூ முகந்தன்னைக் குணேசர்
நனி காக்களக் கணேசர் காக்க
வாமமுறும் இருதோளும் வயங்குகந்த
பூர்வசர் தாம்மகிழ்ந்து காக்க
ஏமமறு மணிமுலை விக்கின விநாசன் காக்க
இதயந் தன்னைத் தோமகலுங் கணநாதர் காக்க
அகட்டினைத் துலங்கே ரம்பர் காக்க 3

பக்கங்கள், குறி, குய்யம், தொண்டைகள்

பக்கம் இரண் டையுந்தரா தரர்காக்க
பிருட்டைத்தைப் பாவம் நீக்கும்
னகரன் காக்க விளங்கிலிங்கம்

வியாளபூ டணர்தாம் காக்க
தக்குய்யந் தன்னைவக் கிரதுண்டர் காக்க
சகனத்தை அல்லல் உக்கண பன் காக்க
ஊருவை மங் களமூர்த்தி உவந்து கர்க்க 4

முழங்கால்கள், இருகால்கள்,
இருகைகள், முன்கைகள்

தாள்முழத்தாள் மகாபுத்தி காக்க
இரு பதம்ஏக தந்தர் காக்க
வாழ்கரம் கூபிப்பிரப் பிரசாதனர் காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் ஆசாபூரகர் காக்க
விரல்பதும அத்தர் காக்க
கேழ்கிளரும் நகங்கள்விநா யகர் காக்க
கிழக்கினிற் புத்தீசர் காக்க 5

திக்குகள் அனைத்திலிருந்தும்

அக்னியில் சித்தீசர் காக்க
உமா புத்திரர்தென் திசைகாக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர் காக்க

விக்கினவர்த்தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்க
வாயுவிற் கசகர் ணன்காக்க
திகழ்உதீசி தக்கநிதி பன்காக்க
வடகிழக்கில் ஈசந் தனரே காக்க 6

பகல், இரவு, முதலிய காலங்களில்
பிற தொல்லைகளிலிருந்தும்

ஏகதந்தர் பகல்முழுதும் காக்க
இர வினும்சந்தி இரண்டன் மாட்டும்
சையின் விக் கினகிருது காக்க
இராக் கதர்பூதம் உருவேதாளம்
மோகினிபேய் இவையாதி உயிர்த்திரத்தால்
வருந்துயரம் முடிவிலாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபு
பாசாங்குசர்தாம் விரைந்துகாக்க 7

மானம், புகழ், முதலியவற்றையும்,
உற்றூர், உறவினரையும்

மதிஞானம் தவந்தரன ம்மானம் ஒளி
புகழ்குலம் வண்சசரீரம் முற்றும்
பதிவான தனம்தானியம் கிருகம்
மனைவி மைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவும் கலந்து சர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர் முன் னான
விதியாரும் சுற்றமெல்லாம் மயூரேசர்2
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க 8

*படிப்போர் நோயற்றவராய் வாழ்வார்*

வென்றி சீவிதம் கபிலர் காக்க
கரி யாதியெல்லாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனை முக்காலமும்
ஓதிடினும் பால் இடையூறொன்றும்
ஒன்றுரு முனிவரவர்காள் அறிமின்கள்
யாரொருவர் ஓதினாலும்
மன்ற ஆங் கவர்தேகம் பிணியற வச்
சிரதேக மாகி மன்னும் 9

*விநாயகர் கவசம் முற்றும்*

கணபதி மூல மந்திரம்

''ஓம் ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம்
கம் கணபதியே வர வரத,
ஸர்வ ஜனம்மே வச மாயை ஸ்வாஹா''

*கணபதி காயத்திரி*

''ஓம் தத்புருஷாய வித்மஹே
வக்ர துண்டாய தீமஹீ
தந்நோ தந்தி, ப்ரசோத யாத்''

*கணபதி தியான ஸ்லோகங்கள்*

''சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம
பிரசன்ன வதனம் த்யாயேத் ஸர்விக்னோப சாந்தயே:
வாகீசாத்யா ஸும நஸ: ஸர்வார்த்தா நாமுபக்ரமே
யம் நத்வா க்ருத்க்ருயாஸ் யுஸ்தம் நமாகமி ஜானனம்
ஸர்வ விக்ன ஹரம் தேவம் ஸர்வ விக்ன விவர்ஜிதம்
ஸர்வ சித்தி ப்ரதாகாரம் வந்தே (அ) ஹம் கண நாயகம்

மூஷிக வாஹன, மோதக ஹஸ்த சாமர கர்ண
விளம்பித் ஸூத்ர
வாமந ரூப, மஹேஸ்வர புத்ர, விக்ன விநாயக பாத
நமஸ்தே

∴ ∴ ∴

சிவமயம்

# பிள்ளையார் வழிபாடு
# 108 போற்றி

## திருச்சிற்றம்பலம்

ஓம் எனும் பொருளாய் உள்ளோய் போற்றி
பூமனும் பொருள்தொறும் பொலிவாய் போற்றி
அகரம் முதலென ஆனாய் போற்றி
அகர உகர ஆதி போற்றி
மகரமாய் நின்ற வானவ போற்றி

பகர்முன் னவனாம் பரனே போற்றி
மண்ணாய் விண்ணாய் மலர்ந்தாய் போற்றி
கண்ணுள் மணியாய்க் கலந்தாய் போற்றி
நீர்தீக் காற்றாய் நின்றாய் போற்றி
கார்குளி ராகக் கனிந்தாய் போற்றி

பகலவன் நிலவாய்ப் பரந்தாய் போற்றி
நிகர்மீன் கணமாய் நிலைத்தாய் போற்றி

மழைபொழி இமய வல்லிசேய் போற்றி
தழைசெவி எண்தோள் தலைவ போற்றி
திங்கட் சடையோன் செல்வ போற்றி

எங்கட் கருளும் இறைவா போற்றி
அறுமுகச் செவ்வேட்கு அண்ணா போற்றி
சிறுகண் களிற்றுத் திருமுக போற்றி
செம்பொன் மேனிச் செம்மால் போற்றி
உம்பர் போற்றும் உம்பல் போற்றி

பண்ணியம் ஏந்துகைப் பண்ணவ போற்றி
எண்ணிய எண்ணியாங் கிசைப்பாய் போற்றி
அப்பமும் அவலும் கப்புவாய் போற்றி
முப்புரி நூல்மார்பு அப்பா போற்றி
எள்ளுருண் டைபொரி ஏற்போய் போற்றி

தெள்ளுறு தெவிட்டாத் தேனே போற்றி
மூவர் மொழியிடம் பொழிந்தாய் போற்றி
தேவர்க ளரிய தேவா போற்றி
மாலுக் கருளிய மதகரி போற்றி
பாலெனக் கடல்நீர் பருகினாய் போற்றி

பாரதம் எழுதிய பரூஉக்கர போற்றி
மாரதம் அச்சொடி மதவலி போற்றி
ம்ாங்கனி அரன்பால் வாங்கினோய் போற்றி
ஈங்கினி எம்பால் எழுந்தருள் போற்றி
கரும்பா யிரங்கொள் கள்வா போற்றி

அரும்பொரு ளேயெம் ஐயா போற்றி
திணைபால் கடந்த தேவே போற்றி
புனையாய் இடர்க்கடல் போக்குவாய் போற்றி
பேழை வயிற்றுப் பெம்மான் போற்றி
ஏழைக் கிரங்கும் எம்மிறை போற்றி

அடியவர் உள்ளம் அமர்ந்தாய் போற்றி
அடிமலர் எம்தலை அணிவாய் போற்றி
திருநீற் றொளிசேர் செம்மால் போற்றி
இருவே றுருவ ஈசா போற்றி
உள்ளத் திருளை ஒழிப்பாய் போற்றி

கள்ளப் புலனைக் கரைப்பாய் போற்றி
நம்பியாண் டார்க்கருள் நல்கியாய் போற்றி
எம்பிரா னாக இசைந்தாய் போற்றி
உருகுவோ ருள்ளத் தொளியே போற்றி
பெருகருள் சுரக்கும் பெருமான் போற்றி

தம்பிக்கு வள்ளியைத் தந்தாய் போற்றி
உம்பர்கட் கரசே ஒருவ போற்றி
பிள்ளையார்ப் பெயர்கொண் டுள்ளாய் போற்றி
வள்ளலாய் நலங்கள் வழங்குவாய் போற்றி
மூவாச் சாவா முத்தா போற்றி

ஆவா எங்களுக் கருள்வாய் போற்றி
தமிழ்ச்சுவை சார்ந்திருச் செவியாய் போற்றி
அமிழ்தாய் எம்மகத் தானாய் போற்றி
மழவிளங் கன்றே மணியே போற்றி
குழவியாய்ச் சிவன்மடி குலவுவோய் போற்றி

பெருச்சா ளியூரும் பிரானே போற்றி
நரிச்செய லார்பால் நண்ணாய் போற்றி
செந்தா மரைத்தாள் தேவா போற்றி
நந்தா மணியே நாயக போற்றி
இருள்சேர் இருவினை எறிவாய் போற்றி

கரிமுகத் தெந்தாய் காப்போய் போற்றி
ஆங்கா ரம்முனை அறுப்பாய் போற்றி
பாங்கார் இன்பப் பராபர போற்றி
கற்றவர் விழுங்கும் கனியே போற்றி
மற்றவர் காணா மலையே போற்றி

சொலலொடு பொருளின் தொடர்பே போற்றி
கல்லும் கரைக்க வல்லோய் போற்றி
தொந்தி வயிற்றுத் தந்தி போற்றி
முந்திய பொருட்கும் முந்தியோய் போற்றி
ஐந்துகை யுடைய ஐய போற்றி

ஐந்தொழில் ஆற்றும் அமர போற்றி
அருள்வாய் அருள்வாய் ஆண்டவ போற்றி
தருவாய் மண்மலர்த் தாராய் போற்றி
கயமுக அசுரனைக் காய்ந்தாய் போற்றி
மயலறும் இன்ப வாழ்வே போற்றி

ஆனையாய்ப் புழுவாய் ஆயினாய் போற்றி
பானை வயிற்றுப பரமே போற்றி
கடம்பொழி யானைக் கன்றே போற்றி
மடம்ஒழி அறிவின் வளனே போற்றி
பாலொடு தேனும் பருகுவாய் போற்றி

மேலொடு கீழாய் மிளிர்வாய் போற்றி
எய்ப்பில் வைப்பாய் இருந்தாய் போற்றி
மெய்ப்பொருள் வேழ முகத்தாய் போற்றி
நல்லார்க் கெட்டும் நாதா போற்றி
பொல்லா மணியே புராதன போற்றி

தம்பிக்கு [illegible]
[illegible]ம்பை அகன்றாய் போற்றி
குறிகுணங் கடந்த குன்றே போற்றி
எட்டு வான்குணத் தெந்தாய் போற்றி
கட்டறு களிற்று முகத்தாய் போற்றி
மலரில் மணமாய் வளர்ந்தாய் போற்றி 95

அல்கதிர் ஒளியின் அமர்வோய் போற்றி
ஓங்கார ரம்முகத் தொருத்தல் போற்றி
ஏங்கா துயிர்க்கருள் இயற்கை போற்றி
எண்ணும் எழுத்துமாய் இசைந்தாய் போற்றி
பண்ணும் பயனுமாய்ப் பரந்தாய் போற்றி 100

அருவே உருவே அருவுரு போற்றி
பொருளே பொருளின் புணர்ப்பே போற்றி
புகர்முகக் களிற்றுப் புண்ணிய போற்றி
அகலிடம் நிறைய அமர்ந்தோய் போற்றி
செல்வம் அருள்க தேவா போற்றி 105

நல்லன எமக்கருள் நாயகா போற்றி
ஆக்கமும் ஊக்கமும் அருள்வாய் போற்றி
காக்கெனங் களையுன் கழலிணை போற்றியே! 108

## திருச்சிற்றம்பலம்

PDPM
A V R
Books

உங்கள் வாழ்க்கையின்
வழிகாட்டி!

ஜோதிஷவித்வான்

# சர்மா

கணித்த ராசிபலன்கள்! ஒவ்வொர்
ஆண்டும் 'சர்மா' கணித்த குருப்பெயர்ச்சி,
ஆண்டுப்பலன், சனிப்பெயர்ச்சி,
வெளியாகிக் கொண்டிருக்கிறது.

'சர்மா' கணித்தது என கேட்டு
வாங்குங்கள். நீங்கள் வாங்கியது
சரியாக இருக்கும்.

வெளியிடுவோர்

விஜய் பப்ளிகேஷன்ஸ்

67, காமகோடி தெரு, ஏரிக்கரை சாலை,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.
தொலை பேசி : 2489 7825